RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s236

சுவடியும் பதிப்பு பணியும்

மோ. அனுசூயா [அ, *]

[அ] தமிழ்த்துறை, புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மாதவரம், சென்னை-600110, தமிழ்நாடு, இந்தியா.

Suvadiyum Pathipu Paniyum

M. Anusooya [a, *]

[a] Department of Tamil, St. Anne's Arts and Science College, Madhavaram, Chennai- 600110, Tamil Nadu, India.

* Corresponding Author:
cinmuka@gmail.com

Received: 29-03-2021
Revised: 17-01-2022
Accepted: 19-01-2022
Published: 28-02-2022

ABSTRACT

The collection of Palm-leaf manuscripts spread throughout Tamil Nadu or the position of the editors who went in search of the manuscripts they needed are understood by the introductions to their book. The government epigraphy library was the only one that did the work before institutions like Madurai Tamil Sangam and thiruvavaduthurai adheenam were involved in epigraphy collection. When an manuscript for a book is obtained, the editors do not have the means to publish it. They searched for many manuscripts. It is possible to know the various messages of putting together a collection of clues that the editors who bibliographic them encountered and collected. They also focused on looking at manuscripts abroad. Reading the old manuscript is a problem in today's environment, reading and printing many manuscripts for the same book is a very difficult one. From this we can see how much difficulty they will have suffered for the Tamil version. It is intended to examine how the work of the edition from the manuscript took place.

Keywords: Palm-leaf Manuscripts, Suvadi, Pathippu Paṇi, Madurai Tamil Sangam, Thiruvavaduthurai Adheenam,

முன்னுரை

தமிழ்நாடு முழுக்கப் பரவியிருந்த தமிழ்ச்சுவடிகளை ஒன்று திரட்டுவது அல்லது தனக்குத்தேவையான சுவடிகளைத் தேடிச் சென்ற பதிப்பாசிரியர்களின் நிலைப்பாடு முதலியன அவர்கள் பதிப்பித்த நூலுக்கு எழுதியுள்ள முகவுரைகளால் நன்கு விளங்குகின்றது. மதுரைத் தமிழ்சங்கம் திருவாவடுதுறை ஆதீனம் போன்ற நிறுவனங்கள் சுவடி சேகரிப்பில் ஈடுபட்டதற்கு முன் அரசு சுவடி நூலகம் ஒன்றே அப்பணியைச் செய்தது. ஒரு நூலுக்கான ஒரு சுவடி கிடைத்ததும் அதைக்கொண்டு அப்படியே பதிப்பித்தல் என்பது பதிப்பாசிரியர்களிடம் இல்லை. பல சுவடிகளை தேடினர். அயல்நாடுகளில் இருக்கும் சுவடிகளை பார்ப்பதிலும் கவனம் செலுத்தினர். சுவடியை வாசித்தல் என்பதே சிக்கலாக இருக்கும் இன்றைய சூழலில் ஒரே நூலுக்கான பல சுவடிகளை வாசித்து அதனை அச்சிடல் என்பது மிகவும் கடினமான ஒன்று ஆகும். இதிலிருந்து அவர்கள் தமிழ் பதிப்புசூழலுக்கு எவ்வளவு இன்னல்கள் பட்டு இருப்பர்கள் என்பது அறியமுடிகிறது. சுவடியில் இருந்து பதிப்பு பணி எவ்வாறு நடைப்பெற்றது என்பது பற்றி ஆராய்வது நோக்காமாகும்.

சுவடி பதிப்பு

கல்வியறிவு பெறுவதற்கு அடிப்படையாக இருப்பவை சுவடிகளாகும். தமிழில் சுவடி என அழைக்கப்பெறும் சொல் ஆங்கிலத்தில் 'Manuscripts' எனக்கூறப்பெறுகின்றது. இச்சொல் இலத்தீன் சொல்லான 'Manuscriptus' என்பதிலிருந்து ஆங்கிலத்தில் 'Manuscripts' எனமாறி வந்துள்ளது. ஆங்கிலத்தில் 'Manuscripts' அதாவது 'Man you Script' எனவும் பொருள் கொண்டனர். சுவடி என்ற சொல்லுக்கு "அச்சுநூலுக்கு வேறுப்பட்டகையினால் அல்லது வேறு முறையினால் எழுதப்பட்ட ஓர் ஆவணம் அல்லது நூல்" என்று ஆக்ஸ்போர்டு அகராதி கூறுகின்றது.

உலகில் பல்வேறு இடங்களில் பலவகையான சுவடிகள் பயன்பாட்டில் இருந்துள்ளன தமிழில் பொதுவாகச் சுவடி என்பது ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பெறுவதை குறிக்கும். அது நாளடைவில் அச்சுப்புத்தகங்களையும் சுவடி என்று குறிப்பிடுவது வழக்கமாயிற்று இதழ்கள் பல சேர்ந்தவற்றைச் சுவடிப்புத்தகம் என்றும் சுவடிப்பொத்தகம் என்றும் அழைத்தனர் அதன் பின்னர் சுவடிப்புத்தங்களை நூல் என்று குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது.

தமிழகத்தில் அச்சு ஊடகங்களின் வரவு பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்ந்தது என்றாலும் பத்தொன்பாதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் அதன் பயன்பாட்டைத் தமிழக மக்களும் அதனூடாக தமிழ் இலக்கிய வளர்ச்சியும் பெற்றன. காலம் காலமாகச் சுவடிகளில் வாழ்ந்து வந்த தமிழ்நூல்கள் அச்சுருப்பெற்று அச்சுப்புத்தகங்களாக வெளிவரத் தொடங்கின இதனூடாக பல தமிழ்ச்சுவடிகள் படிப்படியாக அச்சு வடிவம் பெற்றன. சுவடிப்பதிப்பு என்னும் செயல்பாடு தமிழ்ச்சுவடிகளை நூலாக்கம் பெறச்செய்ததுடன் நூற் பரவலை முன்னிலைப்படுத்தின. இதனால் பல்வேறு நூல்கள் அச்சாக்கம் பெற்றன. இவை தமிழ்நூல்களின் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தன எனலாம்.

சுவடிப் பதிப்பு பணி

நெடுங்காலமாகச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த தமிழ்நூல்கள் அச்சு ஊடகங்களின் வரவால் அச்சிடப்பெற்று அச்சு நூல்களாகப் பதிப்பிக்கப் பெற்றன. தமிழ்ச் சூழலில் நூற்பிரதிகள் குறுகிய காலத்தில் திருத்தமாகவும் பலவாகவும் பெருகக்காரணமாயின. அச்சியந்திரங்களினால் தான் இத்தகைய வளர்நிலை என்ற போது அச்சியரங்களின் தமிழகத்திற்கு வந்தவுடனே இந்த வளர்ச்சி நிகழ்ந்து விடவில்லை. 1556 - இல் கொண்டு வரப்பட்ட அச்சியந்திரங்கள் பயன்பாடு தமிழ்ச்சுவடிகளைப் பொறுத்தவரையில் 19 ஆம் நூற்றாண்டு முதல் வளர்ச்சியுறத் தொடங்கியது. படிநிலை வளர்ச்சி பெற்று அச்சுக்கலை பதிப்புத் துறையாக பரிணமித்தது. இதனூடாக துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், கிறித்துவ மதம் சார்ந்த நூல்கள் முதலானவை வெளியிடப்பட்டன. முதலில் கிழக்கிந்தியக்கம் பெனிக்கோ, பாதிரி மார்களுக்கோ தமிழ்நூல்களை வெளியிடவேண்டும் என்ற எண்ணமும் தேவையும் ஏற்படவில்லை. அதனால் இக்காலக்கட்டத்தில் எவ்விதத்தமிழ் நூல்களும் பதிப்பிக்கப்படவில்லை. பின்னாளில் ஆங்கில கிறித்தவப் பாதிரி மார்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பிக்க வேண்டிய சூழலும், தமிழ் பயின்ற சில பாதிரிமார்களின் தமிழார்வமும் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கக் காரணமாயின இவ்வாறு ஆங்கிலேய அரசு நிறுவிய சென்னைச் கல்விச்சங்கம் இப்பணியில் ஈடுபட்டது. இதனைத் தொடர்ந்து சென்னைப்பாடசாலைப் புத்தகச்சங்கம் ஆசியச்சங்கம் முதலானவையும் தமிழ்நூல் பதிப்புப்பணியில் ஈடுப்பட்டன. இதனால் சுவடியில் இருந்து நூல்கள் அச்சுருவாக்கம் பெற தொடங்கின எனலாம்.

படி எடுப்பதில் பிழை நேரும் வாய்ப்பு

சில ஏடுகள் முழுவதும் இன்றியும் சில ஏடுகள் பாதியில் முறிந்தும் சில பொடிந்தும் போய் விட்டமையின் மிக பழுதுப்பட்டிருக்கும் கற்றறிந்தோர் எவராலும் எழுதப்பெறாது கூலிக்கு எழுதுவோர் எவராலோ எழுதப் பெற்றதால் ண,ன,ந,ல,ள,ழ வேறுபாடுகள் பிறவும் எழுத்து பிழையும், சொற் பிழையும் ஏற்பட்டது.ஏட்டுச் சுவடிகள் காலந்தோறும் ஏற்பட்ட வரி வடிவ மாறுதலுக் கேற்ப பிரதி

செய்யப்பெற்றுப் பரவி வந்தாலும் பல்வேறு நிலையில் பல்வேறு இடங்களிலும் பிரதி செய்யும் போது வடிவ வேறுபாடுகளும் பாடபேதங்களும் பிழைகளும் தோன்றாலாயின. ஆனாலும் சுவடியை பதிப்பித்த சான்றோர்கள் தங்களால் இயன்றளவு பிழை இல்லாமல் பதிப்பித்தனர் என்பதற்கு பழந்தமிழ் நூல்கள் சான்று பகர்கின்றன.

"ஏடு தேடி அலைந்த வூரெத்தனை
எழுதி யாய்ந்த குறிப்புகள் எத்தனை
நாடும் அச்சிற்பதிப்பிகுங் கூலிக்கு
நாளும் விற்ற பல் பண்டங்கள் எத்தனை"

"மூலை முடுக்கில் பரண்களிலே
முடங்கிக் கிடந்த தமிழ்க் குவையும்
நூலைத் தேடி ஐயர் தந்தார்
நுவலும் அவற்றைக் காப்பாற்ற
மூல தனமே இல்லை எனும்
முட்டுப் பாட்டைக் களைந்திடவே
சீல உள்ளம் படைத்தின்று
சேர வாரும் ஐகத்தீரே"

பாதுகாக்கப் பெற்ற சுவடிகளின் நிலை

இந்த நிலையில் பாதுகாக்கப் பெற்ற தமிழ்ச்சுவடிகள் 17 ஆம் நூற்றாண்டிலிருந்தே இப்போது கிடைக்கின்றன (Swaminatha Iyer, 2010). இது வரை கிடைக்கப்பெற்ற தமிழ்ச்சுவடிகளிற் பழமையானது. கி.பி 1611 ஆம் ஆண்டு சேர்ந்த கம்பராமயணச் சுவடியாகும். இது கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளது. பாதுகாக்கப் பெற்ற தமிழ் சுவடிகளில் காவியம், புராணம், இலக்கணம், நிகண்டு, மருத்துவம், சோதிடம், சாத்திரம், நாட்டுபுறக்கதைப்பாடல்கள், சிற்றிலக்கியம் என பல வகையாகப் பிரிக்கலாம். இவை உலக மெங்கும் பரவலாக உள்ளன.

தற்போது நம் நாட்டில் உள்ள சுவடிகள் உள்ள இடங்கள்

பல்கலைக் கழக கீழ்த்திசை சுவடி நிலையம், உ.வே.சாமிநாதயைர் நூல் நிலையம்,பிரம ஞானசபை நூலகம், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிருவனம், சித்தமருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், ஆசியவியல் ஆய்வு நிறுவனம், காமகோடிபீடம், ஸ்ரீசங்கராசாரியார் மடம்,பாண்டிச்சேரியில் - பிரஞ்சித்தியகலைக்கழகம், தென்மாவட்டம் குமார தேவமடாலயம், விருத்தாசலம், திருச்சி- குமாரதேவமடாலயம், துறையூர், தஞ்சாவூர்- சரஸ்வதி மகால் நூல் நிலையம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தருமபுரஆதினம்மடாலயம்- மயிலாடுதுறை, ஸ்ரீகாசிமடம்-திருபனந்தாள், திருவாவடுதுறை ஆதினம் - திருவாவடுதுறை, மதுரை - தமிழ்ச்சங்கம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், கோவை - தவத்திருசாந்தலிங்க அடிகளார், திருமடம், போரூர், கேரளா மாநிலம் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைசுவடி நிலையம், திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை சர்வ கலாசாலை, கோழிக்கோடு, சாகித்தியெ அகாதெமி, திருச்சூர் ஆந்திர மாநிலம் திருவேங்கடவன் பல்கலைகழகம், திருப்பதி, ஆந்திரப்பல்கலைகழகம், விசாகப்பட்டினம், உஸ்மானியாபல்கலைகழகம் , ஐதராபாத், மேற்குவங்கம் தேசியநூலகம், கல்கத்தா மேலே குறிப்பிட்ட இடங்களில் சுமார் இருபத்தொயிரத்து மேலாகத் தமிழ்ச்சுவடிகள் உள்ளன. இவற்றிலேயே பல இடங்களில் உள்ள சுவடிகளுக்கு அட்டவணையே இல்லை. தற்போது சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தினார் உலகில் உள்ள தமிழ்ச்சுவடிகளுக்கு விரிவான விளக்க அட்டவணை ஒவ்வொன்றும் 1000 பக்கங்கள்

கொண்டவையாக 20 தொகுதிகள் இரண்டு தொகுதிகளாக்கி இரண்டு தொகுதிகல் 4 பகுதிகளாக வந்துள்ளன.

மேலை நாடுகளில் தமிழ்ச்சுவடிகள்

1960- ஆம் ஆண்டு நம் நாட்டிலிருந்து பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி என்பவர் மேலை நாட்டில் பல இடங்களுக்கும் சென்று அங்குள்ள பட்டியலிற் கண்ட சுவடிகளுக் கெல்லாம் விளக்கமான அட்டவணை தயாரித்து தமிழக அரசுக்குசமர்பித்தார். உலக தமிழாராய்ச்சி நிறுவனம் அரையாண்டுச் சஞ்சிகை 'தமிழ் இயல்' 18 ஆவது இதழில் திரு.கிரிகோரி ஜேம்ஸ் என்பார் ஐரோப்பிய நாட்டில் தமிழ்ச்சுவடிகள் என்ற கட்டுரையில் அங்கு 88 இடங்களில் தமிழ்ச்சுவடிகள் உள்ளதாகச் தெரிவித்துள்ளார். மேலும் 250 இடங்களில் விவரம் கேட்டுள்ளதாகவும் அவற்றில் பல இடங்களில் தமிழ்ச்சுவடிகள் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். நம் நாட்டிலும் வெளிநாட்டிலும் பல நூலகங்களில் உள்ள தமிழ்சுவடிகள் பெயர் மட்டும் அறிய வந்த சுவடிகள் சுமார் இருபத்தைந்தாயிராமாகும். இவற்றை ஒரு வாறாக வகைப் படுத்தியதில் இவை சுமாராக் கீழே குறிப்பிட்ட சதவீதத்தில் இருப்பதாக உணரப்பெற்றது. மருத்துவம்- 60 சதவீதம், சோதிடம்- 5 சதவீதம், கலை இலக்கியம்- 10 சதவீதம், வரலாறு - 5 சதவீதம், இலக்கணம் - 5 சதவீதம் என்று சுவடிகள் பற்றிய செய்திகள் அறியமுடிகிறது.

முதல் சுவடிப் பதிப்பு முயற்சி

தமிழகத்தில் அச்சு ஊடகங்கள் நிறுவிய கிழக்கிந்திய கம்பெனி பாதிரிமார்கள் மட்டும் பயன்படுத்த வேண்டு மென்ற நோக்கத்தில் இந்தியர்கள் யாரும் அச்சுப்போடக் கூடாதெனவும் சட்டம் போட்டது. பின்னர் நீக்கி அச்சு, பதிப்புச் சட்டங்களைக் கடுமையாக்கினர். அந்நியர் ஆட்சியும் கடுமையான சட்டங்களும், பொருளாதாரச்சிக்கலும் தமிழ்ச்சுவடிப் பதிப்புப்பணியை முடக்கின. கடுமையான பதிப்புச் சட்டங்கள் நடைமுறையில் இருந்த போதும் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப்பிரகாசன் அவர்கள் மாசத்தினசரிதையின் அச்சுக்கூடத்தின் சார்பில் அம்பலவாணக் கவிராயர் பரிசோதித்த திருக்குறள் மூலபாடத்தை 1812 – இல் பதிப்பித்தார். இந்நூலுடன் நாலடியார் மூலபாடமும் திருவள்ளுவமாலையும் ஒருங்கே வைத்துப் பதிப்பித்தார். இந்நூலே ஓலைச் சுவடியிலிருந்து அச்சுவடிவம் பெற்ற முதல் பதிப்புநூல் என்ற பெருமைக்குரியது. இதே ஆண்டில் எல்லீஸ் பாதிரியாரும் திருக்குறள் அறத்துப்பாலைப் பதிப்பித்துள்ளார். இவ்விரு நூல்களும் ஓரே ஆண்டில் பதிப்பிக்கப்பட்டாலும் அம்பலவாணக்கவிராயர் அவர்கள் பதிப்பில் ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடில்லை. எல்லீஸ் பாதிரியார் பதிப்பில் வேறுபாடு காணப்படுவதுடன், மேற்கோள்களும் உள்ளன. இத்தன்மையால் எல்லீஸ் பாதிரியார் பதிப்பு பின்னையது எனலாம். 1712 - ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் நிறுவப்பெற்றாலும் ஒரு நூற்றாண்டுக் காலம் கழித்தே திருக்குறள் (1812) பதிப்பிக்கப்பெற்றது. திருக்குறள் பதிப்பிலிருந்து தமிழ் சுவடிப் பதிப்பு வரலாறு தொடங்கியது. திருக்குறள், நாலடியாரை அடுத்து நீதி நெறி விளக்கம், தஞ்சைவாணன் கோவை, பொன்வண்ணத்தந்தாதி, புறப்பொருள் வெண்பா மாலை, அகப்பொருள்விளக்கம் , திவாகரம் - சேந்தனார், நளவெண்பா, உரிச்சொல் நிகண்டு, வாக்குண்டாம், நைடதம், திருவாசகம், ஆத்திச்சூடி, மூதுரை முதலான அறநூல்கள், இலக்கணநூல்கள், பக்திநூல்கள் ஆகியன மட்டுமே பதிக்கப் பெற்றன. திருக்குறள் பதிப்பிக்கப் பெற்று அறுபது ஆண்டுகள் கழிந்த பின்பே சிலப்பதிகாரம் (1872) முதலான பெருங்காப்பிய நூல்களும் சங்க இலக்கிய நூல்களும் பதிப்பிக்கப் பெற்றன (Subramanian, 2010a; Subramanian 2010b).

19 ஆம் நூற்றாண்டில் பதிக்கப் பெற்ற நூல்கள், நூல் குறித்த விவரங்கள் எதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லை. முறையான பாதுகாப்போ தொகுப்போ இல்லாத்தே இதற்குக் காரணம். "இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எவ்வகையான நூல்கள் அச்சியற்றப் பெற்றன என்று அறிவிக்கும் துணை நூல் எதுவும் இல்லை. இந்நிலையில் சென்ற நூற்றாண்டில் அச்சில் வெளி வந்த நூல்கள் நமக்குப் புதைபொருளகவே இருக்கின்றன". இந்நிலையில் தொடக்ககாலப் பதிப்பு நூல்கள்

அனைத்தையும் அறிய முடியவில்லை இருப்பினும் சிலரது விவர அட்டவணைத் தொகுப்பு முயற்சியினால் அக்காலத்தில் வெளி வந்த நூல்கள் சிலவற்றை அறியமுடிகிறது.

பதிப்பு துறையில் பல்வேறு புதிய சட்ட மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன. இப்புதிய சட்டத்திலும் அச்சுப்புத்தகத்தின் முகப்பில் அச்சிடுபவரின் பெயர் வெளியிடுபவரின் பெயர், வெளியிடும் இடம் முதலான குறிப்புகள் நன்கு தெரியும்படி அச்சிடவேண்டும் என்ற உத்தரவு இருந்தது இந்நிலையிலே அனைத்து நூல்களும் பதிப்பிக்கப் பெற்றன. இப்புதிய சட்டத்திருத்தம் சுவடிப் பதிப்புபணிக்குப் புதிய உத்வேகத்தை அளித்தது. இச்சூழலில் தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வமும் பற்றும் கொண்ட நம் நாட்டுச் தமிழறிஞர்கள் அச்சியந்திரங்களை நிறுவி சுவடிகளை நூலாக்கம் பெறச் செய்தனர். 1867 க்குப் பிறகு அன்றைய அரசாங்கத்தார் அச்சுச்சட்டத்திற்கு அடிப்படையில் நாட்டில் அச்சாகும் நூல்களில் ஒவ்வொன்றின் படியையும் அரசாங்கத்திற்கு (Registrar of Books) அனுப்பி வைக்கவேண்டுமென ஆணையிட்டார். இவ்வாறாக அன்றைய அரசாங்கம் பதிப்புத்துறையில் கடுமையான சட்டங்களைப் புகுத்தியும் இயற்றியும் தளர்த்தியும் வந்தனர்.

முடிவுரை

தமிழ் ஆர்வலர்கள் தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பித்து தமிழ் நூல்களை அழியா வண்ணம் காத்து வந்தனர். அவ்வாறு காத்து வந்தமையினால் தான் நமக்கு இன்று பல்வேறு அறிய தமிழ் நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பதிப்பு முன்னோடிகள் தங்கள் வாழ் நாள் முழுவதையும் நூல்களை பதிப்பிக்கவே தங்கள் வாழ்க்கையை அர்பணித்தார்கள் . அந்த பெருந்தகையினரால் தான் தமிழ் உலகம் வாழ்கிறது.

References

Subramanian, S, V., (2010a) Pathinen Keelkanaku noolgal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Subramanian, S, V., (2010b) Thamizh Sevviyal Noolgal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U, Ve., (1950) En Sarithiram, Adaiyalam Publications, Chennai, India.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License